1972 ஆகஸ்ட் 19]

*198. வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் தாதகவுண்டன் பட்டிக்கருகில் அணைக்கட்டுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், இத்திட்டம் நிறைவேற்றப்படுவதில் கால தாமதம் ஏற்படுவதற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் சிக்கனமற்றதாகக் கருதப்பட்டுள்ளது. பிற சிக்கனமற்ற திட்டங்களுடன் சேர்க்கப்பட்டு இதுவும் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியிலே போடப்பட்டிருக்கிற திட்டம் ஆகும். அன்எக்கனுமிக் ஸ்கிம் என்ற அடிப்படையிலே பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் அரசிடனிடத்திலே இருக்கின்றன. சிக்கனமற்ற திட்டம் என்று பார்ப்பதைவிட பின்தங்கிய பகுதியிலே இருக்கின்ற திட்டம் என்று பார்த்து அந்த முறையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு 3 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய். மதுரை மாவட்டத்திலே டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் உணவு உற்பத்தி டன் ஒன்றுக்கு 6,616 ரூபாய் அளவுக்கு ஆகும் என்று தெரிகிறது. இத்திட்டம் சிக்கனமற்றதாகக் கருதப்பட்டாலும் பிற சிக்கனமற்ற திட்டங்களுடன் சேர்க்கப்பட்டு இதுவும் அரசின் ஆய்வில் உள்ளது.

கால்நடைகள் வாங்கக் கடனுதவி

*199. வினு—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கிராம கூட்டுறவு நாணய சங்கங்கள் மூலம் அரிஜனங்களுக்கு மாடு ஆடுகள் வாங்கப் பணம் கடன் வழங்கும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இச்சங்கங்களின் துணை விதிகளில் இதற்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : சங்கங்களினுடைய துணைவிதி களிலே இடம் அளிக்கப்பட்டிருந்தாலும் அரிசனங்கள் ஆடு மாடு கள் வாங்குவதற்கு லோன் சாங்ஷன் செய்யப்படுவது கிடையாது. ஒரு ஏரியா முழுவதுமாக சாங்ஷன் செய்வதிலே இனிமேலாவது அரசு உத்தரவுகள் போட்டு கடன் வழங்கச் செய்வதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், செய்யப்படுவது கிடையாது என்று அவர்களே தகவல் தெரிவித்து இருக்கிறார்கள். தகவல்கள் தரவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது. 1970-71-ஆம் ஆண்டு 2,735 தாழ்த்தப் பட்ட மக்களுக்கு இரண்டு லட்சத்து ஓராயிரம் ரூபாயும், 1971–72-ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 1,864 தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 1 லட்சத்து 86 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டிருக் கிறது.

திரு. சோ. அழகர்சாமி : விதிகள் இடம் அளிப்பதாக அமைச் சர் அவர்கள் சொன்னார்கள். நெல்லை மாவட்டத்திலே சிறு விவ சாயிகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டம் செயல்பட்டு வரு கிறது. ஆடு மாடுகள் வாங்குவதற்கு மூன்றில் ஒரு பங்கு மானியம் பெற்றவர்களுக்கு, அறவே அப்படி மானியம் பெறுகின்ற பகுதிகளிலே, கடன்கள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. கூட்டுறவுத் திட்டத்தின் அடிப்படையிலே மானியம் மூன்றில் ஒரு பங்கு கொடுக்கிற இடங்களிலேயும் கடன்களை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டுறவு மத்திய வங்கியின் இயக்குநர். அவர்களே அறவே கொடுக்கவில்லை என்று சொல்வதாக இருந்தால் அவர் களுக்குதான் அந்தப் பொறுப்பு இருக்க வேண்டும். உண்மை யாகப் பார்த்தால் கொடுக்கப்பட்டிருப்பதாகத்தான் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.